Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY, SEPTEMBER 18, 2023

திங்கட்கிழமை செப்டெம்பர் 18, 2023 | ஒளி: 09 கதிர் 085 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | free



## யாசகர் நிதியுதவி

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் வண்ணை வேங்கட ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் பாலஸ்தாபனம் நிகழ்ந்து, ஆலயமானது புனருத்தாரணம் செய்யப்படவுள்ளது.

அந்தவகையில் யாசகர் ஒருவர் தன்னால் சேகரிக்கப்பட்ட யாசகத்தில் இருந்து இரண்டு இலட்சம் ரூபாய் பண உதவியினை ஆலய நிர்வாகத்தினரிடம் ஞாயிற்றுக்கிழமை (17) வழங்கி வைத்தார்.

## கல்விக் காலத்தை குறைக்க யோசனை



கல்விக் காலத்தை ஒரு வருடத்தால் குறைக்க பேச்சுவார்த்தை நடந்து வருவதாகவும் அதனைச் செய்ய முடியுமாக இருந்தால், எமது பிள்ளைகள் ஒரு வருடம் முன்னதாகவே பட்டப்படிப்பை நோக்கிச் செல்ல முடியும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

விசாகா கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

'ஐ.எஸ் பயிற்சி பெற்ற சிலர் காத்தான்குடியில்'

# பிள்ளையானின் குற்றச்சாட்டை விசாரிக்கவும்

### காத்தான்குடி பள்ளிவாயல் சம்மேளனம் தெரிவிப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்




ஐஎஸ். ஐஎஸ். அமைப்பிலிருந்து பயிற்சி பெற்ற சிலர் காத்தான்குடியில் இன்னும் வாழ்வதாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக அரசாங்கம் உடனடியாக விசாரணை செய்ய வேண்டும் என்று காத்தான்குடி சமூகம் சார்பாக காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் அரசாங்கத்தை கோடுவதாக காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2



## தெற்கு தொழிற்படை இழப்புக்கு வடக்கில் இழப்பீடு கோரவேண்டும்

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் அவர்களின் தொழிற்படைப் பலத்தை மேம்படுத்தி, அதன் மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் முன்னேற்றியுள்ளது என்றும் அதன் காரணமாக உலகில் தெற்கு என்ற ரீதியில் நமது கற்ற தொழிற் படை இழப்புக்காக, உலகின் வடக்கில் இருந்த இழப்பீடு கோரப்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார். .

தொடர்ச்சி P2

## மரக்கிளை தலையில் விழுந்து 17 வயதான மாணவி மரணம்

■ ஆ.ரமேஸ், துவாரகஷான்



மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்ற பாடசாலை மாணவியின் தலையில் மரக்கிளை ஒன்று விழுந்ததால் அம்மாணவி உயிரிழந்துள்ளார் என பூண்டுலோய பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை தவலந்தன்ன வீதியில் பூண்டுலோயா, பலுவத்த பிரதேசத்தில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அக்கரபத்தனை பம்பரகெலே அபகன்லி தோட்டத்தில் வசித்து வந்த விஜயராஜ் திவ்யராணி (வயது 17) என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2




## ஜனாதிபதி நாடு திரும்பியதும் உடன்படிக்கை கைச்சாத்து

### கடும் நிபந்தனைகள் விதிக்கப்படும்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதையடுத்து அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் பணியாளர் மட்ட உடன்படிக்கையில் கைச்சாத்திட தயாராகி வருகின்றன.

தொடர்ச்சி P2

ஆசியக் கிண்ணம்:

## 8ஆவது தடவையாக இந்தியா சாம்பியன்



ஆசியக் கிண்ணத் தொடரில் எட்டாவது தடவையாக இந்தியா சம்பியனானது.

கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று (17) நடைபெற்ற இலங்கையுடனான இறுதிப் போட்டியில் வெற்றமையைத் தொடர்ந்தே இந்தியா சம்பியனாகியிருந்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

தொடர்ச்சி P2




ஹமில்டன் வங்கியின் வழக்கில்

## இலங்கைக்கு ஆதரவாக இரு நாடுகள் இடையீட்டு மனு

இலங்கைக்கு எதிராக ஹமில்டன் ரிசர்வ் வங்கி, நியூயோர்க் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில், இலங்கை கோரிய ஆறு மாத கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்று கொரி பிரித்தானியாவும் பிரான்ஸும் இடையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

தொடர்ச்சி P2

## காதலியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசிய காதலன் கைது

### மேலும் இருவரும் கைது இருவருக்கு வலை

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், தாவடியில் பகுதியில் உள்ள காதலியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசிய குற்றச்சாட்டில் காதலன் உள்ளிட்ட மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீட்டுக்குள் சனிக்கிழமை (16) அதிகாலை பெற்றோல் குண்டு வீசிய கும்பல் ஒன்று , வீட்டின் மீதும், வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ மீதும் தாக்குதல் மேற்கொண்டு சேதங்களை ஏற்படுத்தியதுடன், வீட்டில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பி சென்று இருந்தது.

தாக்குதலில் வீட்டில் இருந்த யுவதி உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் ஐவர் காயமடைந்த நிலையில்,

தொடர்ச்சி P2

ஐ.நா கூட்டத்துக்காக

## நியூயோர்க்கில் ஜனாதிபதி ரணில்

கியூபாவில் நடைபெற்ற "ஜி77 + சீனா" அரச தலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கை நேரப்படி ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்.

தொடர்ச்சி P2

## துப்புக் கொடுத்தார் துப்பாக்கி மீட்பு



'கனேமுல்ல சஞ்சீவ' என்று அழைக்கப்படும் சஜீவ குமார சமரதுங்கவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் மூலம் பல குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ரி 56 ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது பல குற்றங்கள் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில், குறித்த துப்பாக்கியானது கம்பஹா மற்றும் பல பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு 90 நாட்களுக்கு சஞ்ஜீவவை காவலில் வைக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மாளிகாவத்தை துப்பாக்கிச் சூட்டில் சிறுமி மரணம்

மாளிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 12 வயது சிறுமியும் அவரது தந்தையும் காயமடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை (17) மாலை 5 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முச்சக்கரவண்டியில் பயணித்த குழுவினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

காயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் சிறுமி மரணமடைந்துள்ளார்.

ஒக். 24 முதல் 26 வரை, இலங்கையில்

## தென் சீனா கடல் வலய வட்டமேசை மாநாடு

தென் சீனா கடல் வலய 8 ஆவது ஷென்ஸன் வட்டமேசை மாநாடு எதிர்வரும்அக்டோபர் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு கொழும்பு ஹுனுபிட்டிய கங்காராம விகாரையினால் நடத்தப்பட இருப்பதோடு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற உள்ளது.

தொடர்ச்சி P2

## அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானம்



சுற்றாடல் தொடர்பில் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களை மீண்டும் மறுசீரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், சுற்றாடல் மாசடைவதைத் தடுத்து சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, செயலணியொன்றை நியமிக்கவுள்ளதாகவும், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவது மற்றும் கண்காணிப்பது இந்த செயலணியின் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

சூழல் நமக்கு மிகவும் முக்கியமானது என்றும் நாம் சூழலை பாதுகாக்காவிட்டால் அடுத்த தலைமுறை இந்த சுற்றுச்சூழலை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

## நீதவான் மீது லேசர் ஒளி பாய்ச்சிய ஆசிரியர் கைது





நீதிமன்ற அமர்வின் போது கடுவெல நீதவான் மீது லேசர் ஒளி பாய்ச்சிய குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட தனியார் வகுப்பு ஆசிரியரை செப்டெம்பர் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்ற பதிவாளர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரை பரிசோதித்த பொலிஸார் அவரிடமிருந்து லேசர் கருவியொன்று கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், சந்தேக நபர் மனநலம் குன்றியவர் என அவரின் பெற்றோர் தெரிவித்ததாகவும் அதுபற்றிய வைத்திய அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்கமுடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## கல்விக் காலத்தை...

க.பொ.த சாதாரண தர பரீட்சையை 10ஆம் தரத்திலும் உயர்தரப் பரீட்சையை 12ஆம் தரத்திலும் நடத்தி, தற்போதுள்ள 13ஆம் தரம் வரையிலான கல்விக் காலத்தை 12 ஆண்டுகளாகக் குறைப்பதற்கே கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருவதாக அறியமுடிகிறது.

குறித்த விழாவில் மேலும் தெரிவித்த பிரதமர், “உரிய காலத்தில் பரீட்சைகளை நடத்தி, உரிய காலத்தில் பெறுபேறுகளை வழங்க வேண்டு.

ஒரு கல்லூரியை விட்டு வெளியேறி, உலகளாவிய அறிவை அணுகுவதற்கான மையமாக இருக்கும் பல்கலைக்கழகத்திற்குச் செல்கிறோம், இதன் மூலம் நாட்டிற்கு பல நன்மைகளை சேர்க்கிறோம். அதனால்தான் கல்லூரிக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

எங்களைப் போலவே, பெற்றோர்களும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளும், உரிய நேரத்தில் பரீட்சைகள் நடத்தப்பட வேண்டும், உரிய நேரத்தில் பெறுபேறுகளைப் பெற வேண்டும்,

உயர்கல்விக்கான கதவுகள் சரியான நேரத்தில் திறக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த காலச் சட்டகத்தை உறுதியுடன் செயற்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது. இது அவசியமானது.

கல்விக் காலத்தை ஒரு வருடங்களால் குறைக்க பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அதனைச் செய்ய முடியுமாக இருந்தால், எமது பிள்ளைகள் ஒரு வருடம் முன்னதாகவே பட்டப்படிப்பை நோக்கிச் செல்ல முடியும். மேலும், பல்வேறு துறைகளுக்கு செல்ல முடியும். அந்தச் சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டும் என்றார்.

## தெற்கு தொழிற்படை...

கியூபாவின் ஹவானா நகரில் ஆரம்பமான “ஜி77 + சீனா” அரச தலைவர் உச்சி மாநாட்டில் உரையற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை ஜனாதிபதி தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, “தற்போது குறைந்த செயற்திறனுள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் குறித்து மதிப்பீடுகளைச் செய்வதற்கும், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க சபையொன்றையும், டிஜிட்டல் மாற்ற முகவர் நிறுவனமொன்றையும் நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை எடுத்துள்ளது.

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பிரதிபலனாக, புதிய தொழில்நுட்பவியலுக்காகவே விசேடமான நான்கு புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றம் குறித்த உத்தேச சர்வதேச பல்கலைக்கழகத்தை அதில் ஐந்தாவதாக ஸ்தாபிப்பதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

“ஜி77 + சீனா” குழுவில் செயற்திறன் மிக்க ஒத்துழைப்பு பொறிமுறை ஒன்றும் தேவை. உலகளாவிய தெற்கிற்கான விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுக்கான ஒன்றிணைவு புத்துயிர் பெறச்செய்வதற்கு அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக ஒரு தசாப்தமாக அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% ஒதுக்குவதன் மூலம், உறுப்பு நாடுகள் சில அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டும் என்றும் நான் பரிந்துரைக்க விரும்புகின்றேன்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறையைப் பின்பற்றி, டிஜிட்டல் மயமாக்கல், சுகாதாரம், மருத்துவம், செயற்கை நுண்ணறிவு மற்றும் பசுமை ஹைட்ரஜன் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறைகளில், தொழில்நுட்பத் தளங்களை உருவாக்குவதற்கு அரச துறை மற்றும் தனியார் துறை ஆகிய இரண்டும் ஒத்துழைப்புடன் செயற்படுவது மிகவும் முக்கியமாகும்.

உலகளாவிய ரீதியில் தெற்கிலிருந்து வடக்கிற்கு இடம்பெறும் நுண்ணறிவு ஓட்டத்தின் பிரதிபலனாக கல்வி கற்ற தொழிற்படை இழப்பு, தெற்கின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறைகளின் வளர்ச்சிக்கு மற்றொரு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள் அவர்களின் தொழிற்படைப் பலத்தை மேம்படுத்தி, அதன் மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் முன்னேற்றியுள்ளது. அதன் காரணமாக உலகில் தெற்கு என்ற ரீதியில் நமது கற்ற தொழிற் படை இழப்புக்காக, உலகின் வடக்கில் இருந்த இழப்பீடு கோரப்பட வேண்டும்.

உலகளாவிய ரீதியில், தெற்கு நாடுகளுக்கு இடையில் அதிக ஒத்துழைப்பை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். ஒத்துழைப்பை மேம்படுத்தல், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக்கொள்ளுதல், மற்றும் விஞ்ஞானம், தொழிநுட்பம், புத்தாக்கம் ஆகியவற்றின் ஆற்றல்களைப் பயன்படுத்தக் கூடிய கொள்கைகளை மேம்படுத்துவதற்கு கொழும்புத் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தை உருவாக்குவது குறித்தும் நான் இங்கு பரிந்துரைக்கின்றேன்.

புதிய ஹவானா பிரகடனத்தை ஆதரிப்பதற்காக இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்த வேண்டும். “ஜி77 + சீனா” அரச தலைவர்களின் உச்சிமாநாட்டின் கூட்டுக் குரல், சர்வதேச ரீதியில் ஒலிக்கச் செய்ய ஒன்றிணையுமாறும் நான் அனைத்து உறுப்பு நாடுகளிடமும் கேட்டுக்கொள்கின்றேன்” என்றார்.

# பிள்ளையானின்...

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களினால் சம்மேளனத்தினால் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் சம்மேளன செயலாளர் ஏ..எல்.எம்.சபீல் நழீமி தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “ஐஎஸ். ஐஎஸ். அமைப்பிலிருந்து பயிற்சி பெற்ற சிலர் இந்த காத்தான்குடியில் இன்னும் வாழ்வதாக கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னால் எமது மாவட்டத்தைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஒரு குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

அவர்கள் யார் யார் என்று அடையாளப்படுத்தி அவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாக அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்பது எமது காத்தான்குடி சமூகம் சார்பாக அரசாங்கத்திடம் முன் வைக்கின்ற வேண்டுகோளாகும்.

2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் எமது நாடு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டதை நாம் அறிவோம். குறிப்பாக அந்த ஈஸ்டர் தாக்குதலிலே ஈடுபட்ட ஒரு சிலர் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் என்பதால் எமது காத்தான்குடி சமூகம் பாரியளவிலே பல்வேறு விடயங்களினாலும் பாதிக்கப்பட்டது.

வியாபபர நடவடிக்கைகளை மேற் கொள்ளமுடியாமலிருந்தது. ஏனைய பிரதேசங்களுக்கு காத்தான்குடி முஸ்லிம்கள் செல்கின்ற போது அவர்களை சந்தேக கண் கொண்டு பார்த்தனர்.

இப்படியான அச்சுறுத்தல்களையும் பல்வேறு வகையான சந்தேகங்களையும் இந்த சமூகத்தின் மீது இந்த ஈஸ்டர் தாக்குதல் ஏற்படுத்தியது. இந்த ஈஸ்டர் தாக்குதல் இடம் பெற்ற பின்னர் விசாரணை செய்வதற்காக பல்வேறு விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

இந்த ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னால் யார் இருந்தார்கள் யார் செய்தார்கள் என்பவைகள் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் இரண்டு குழுகள் அமைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டன.

இருந்தாலும் அண்மையில் சனல் 4 வெளியிட்ட ஆவணத் தொகுப்பின் பின்னர் இது தொடரபான இன்னும் சில விடயங்கள் வெளி வரத் தொடங்கியுள்ளன.

அஸாத் மௌலானா தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் அதன் பாரதூரத்தை கருத்திலே கொண்ட ஜனாதிபதி இதனை விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதியர்சர் தலைமையில் 3 பேரடங்கிய ஆணைக்குழுவை நியமித்துள்ளார்.

அதற்காக ஜனாதிபதியவர்ளுக்கு காத்தான்குடி சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு இதை சர்வதேசமும் விசாரணை செய்யவேண்டும். சர்வதேச விசாணையும் அவசியம் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். அந்த ஆவணப்படத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள் பாரதூரமான விடயங்கள்

இந்தக் குண்டுத் தாக்குதலின் பின்னால் அரசாங்கம் இருந்திருக்கின்றது என்ற பலமான சந்தேகம் அனைவரின் உள்ளங்களிலும் எழும்பத் தொடங்கியுள்ளது. மக்கள் இதனை பேசத் தொடங்கியிருக்கின்றார்கள்.

கண்டிப்பாக இந்தக் குற்றச்சாட்டு விசாரிக்கப்பட வேண்டும். அரசாங்கம் இது விடயத்தில் பொடு போக்காக இருக்கக் கூடாது என்பததை நாம் தெளிவாக கூறி வைக்க விரும்புகின்றோம். இந்தக் குற்றச் சாட்டை முன் வைத்தவர் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமாகும்.

அரசாங்கம் இது விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்தி விசாரண செய்ய வேண்டும் என்பதை நாம் அரசாங்கத்தை வலியுறுத்திகின்றோம்” என்றார்.

## 8ஆவது தடவையாக...

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ் (6), ஹர்டிக் பாண்டியாவிடம் (3) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 15.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 50 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 51 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, ஷுப்மன் கில்லின் ஆட்டமிழக்காத 27 (19), இஷன் கிஷனின் ஆட்டமிழக்காத 23 (18) ஓட்டங்களோடு 6.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியி லக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மொஹமட் சிராஜ் தெரிவானார்.

## மரக்கிளை தலையில்...

கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் இருந்து தனது தந்தையுடன் அக்கரப்பத்தனை பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த போது இந்த அசம்பாவிதத்துக்கு முகம் கொடுத்துள்ளார்.

## காதலியின் வீட்டுக்கு...

சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், வீட்டில் வசிக்கும் யுவதியுடன் உரும்பிராய் பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் காதல் வயப்பட்டு இருந்ததாகவும் அந்த காதல் விவாகரமே தாக்குதலுக்கு காரணம் என கண்டறிந்தனர்.

அதனை அடுத்து யுவதியை காதலித்ததாக கூறப்படும் இளைஞன் உள்ளிட்ட மூவரை சனிக்கிழமை (16) மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலும் இரு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இலங்கைக்கு ஆதரவாக...

ஹமில்டன் ரிசர்வ் வங்கிக்கு, 2022ஆம் ஜூலை 25ஆம் திகதி முதிர்ச்சியடைந்த 250 மில்லியன் டொலர் இறையாண்மைப் பத்திரங்களை 5.875 சதவீத வட்டியில் இலங்கை செலுத்த வேண்டியிருந்த நிலையில், முழுத் தொகையையும் வட்டியுடன் செலுத்துமாறு உத்தரவிடக் கோரியே ஹமில்டன் ரிசர்வ் வங்கி வழக்கு தாக்கல் செய்திருந்தது.

அமெரிக்கா இந்த வழக்கில் இலங்கைக்கு சார்பாக இடையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ள நிலையில், இலங்கைக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு, தற்போது இடம்பெறும் மறுசீரமைப்புப் பேச்சுக்களை சீர்குலைக்கக்கூடும் என்ற கவலைகள் எழுந்துள்ளதால் இலங்கை கோரிய ஆறு மாத கால அவகாசத்தை வழங்க வேண்டும் என இரு நாடுகளினதும் இடையீட்டு மனுக்களில் கோரப்பட்டுள்ளன.

இலங்கைக்கான தற்போதைய கடன் மறுசீரமைப்பு செயல்முறை மற்றும் அதன் பொருளாதாரத்தின் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான நாட்டின் முயற்சிகளை இரண்டு நாடுகளும் ஆதரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு செயல்முறை முடிவதற்குள், ஹமில்டன் வங்கிக்கு ஆதரவாக நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்படுமானால், அது நடந்து கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளை சீர்குலைக்குமென மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் போது உள்ளூர் வங்கிகளின் இறையாண்மைப் பத்திரங்கள் குறித்து கவனம் செலுத்தத் தவறிவிட்டதாகவும் ஹமில்டன் வங்கி குறிப்பிட்டிருந்தது.

## நியூயோர்க்கில்...

“2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்” என்ற தொனிப்பொருளின் கீழ் செப்டம்பர் 18 முதல் 21 வரை இம்முறை கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி, செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கூட்டத்தொடரில் பங்கேற்று, தனது விசேட உரையை ஆற்ற உள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக செப்டம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள, 2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலக தலைவர்களினால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

மேலும், அன்று ஜனாதிபதி, உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை

## தென் சீனா...

இந்த வட்டமேசை மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

சீனாவின்ஷென்ஸன் வட்டமேசை மாநாடு வருடாந்தம் நடைபெற்று வருவதோடு ஒற்றுமையுடன் ஒன்றாக பயணித்து பட்டுப்பாதையின் ஞானத்தை பெறுவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் 22 நாடுகளின் பங்கேற்புடன் இம்முறை மாநாடு இலங்கையில் நடைபெறும் என்றும் இதன் போது அறிவிக்கப்பட்டது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

## துப்புக் கொடுத்தார்...

நேபாளத்திலிருந்து நாடு திரும்பிய பாதாள உலக செயற்பாட்டாளரான சஜீவ குமார சமரதுங்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதன்கிழமை (13) கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து போலி கடவுச்சீட்டும் மீட்கப்பட்டுள்ளது.

பல கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட கனேமுல்ல சஞ்சீவ படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்ற அவர், பின்னர் நேபாளத்துக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், அவரைக் கைது செய்வதற்கான சர்வதேச சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இலங்கை திரும்ப முடிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதவான் மீது லேசர்...

சந்தேக நபரை எதிர்வரும் செப்டெம்பர் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், சந்தேகநபரின் மனநிலை குறித்து மனநல வைத்தியசாலையிலிருந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

## ஜனாதிபதி நாடு திரும்பியதும்...

ஜனாதிபதி, செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கூட்டத்தொடரில் பங்கேற்று, விசேட உரையாற்ற உள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முன்னைய உடன்படிக்கைகளின் சில இலக்குகளை இலங்கை அடையத் தவறியதால், இம்முறை கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டியுள்ளதாக நாணய நிதிய குழு அண்மைய சந்திப்பில் குறிப்பிட்டுள்ளது.

நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் முதல் மதிப்பாய்வின் ஒரு பகுதியாக வியாழக்கிழமை கலந்துரையாடலை ஆரம்பித்த நாணய நிதிய குழு அன்றைய நாளில் சில உடன்பாடுகளை எட்டியுள்ளது.

இந்த சந்திப்பின் போது, ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் ஆகியோர் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தனர்.

நாணய நிதியத்துடனான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தையின் ஆரம்ப சந்திப்பின் போது, ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை தயாரித்து கையொப்பமிட தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, சீர்திருத்தங்கள் மற்றும் இலக்குகளை அடைவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை ஐஎம்எப் குழு அங்கீகரித்தது.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் உட்பட சில பகுதிகள் விரைவான விகிதத்தில் மேம்படுத்தப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டியது.

## அரச நிறுவனங்களை...

மேலும், சூழலைப் பாதுகாப்பதன் மூலமே நாட்டின் பொருளாதாரத்தின் நிலைத்தல் தன்மையை உறுதி செய்ய முடியும் என்றார்.

அந்த அனைத்து பொறுப்புக்களையும் அரசாங்கத்திடம் மாத்திரம் ஒப்படைக்க முடியாது என்றும்

சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பு மக்களுக்கும் உள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

அந்தப் பொறுப்பை மக்களுக்குத் தெளிவுபடுத்த சரியான வேலைத்திட்டம் இருக்க வேண்டும் எனவும் எனவே, அந்தப் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்ற நாம் உறுதி பூண்டுள்ளோம் என்றார்.




## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியானது

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், நீதி, சிறை மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவால் வர்த்தமானியில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட சட்டமூலத்தில் இலங்கை மற்றும் இலங்கை மக்களின் தேசிய பாதுகாப்பை பயங்கரவாதச் செயல்கள்,

பயங்கரவாதத்துடன் தொடர்புடைய பிற குற்றங்கள் மற்றும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே செய்யப்படும் பயங்கரவாதக் குற்றத்தை உருவாக்கும் குறிப்பிட்ட செயல்களில் இருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படும்.

இலங்கைக்கு வெளியில் பயங்கரவாதச் செயல்களைத் தயாரிப்பதற்காக இலங்கைப் பிரதேசத்தையும் மக்களையும் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான சட்டங்கள், கண்டறிதல், அடையாளம் காணுதல், பயமுறுத்துதல், கைது செய்தல், தடுத்து வைத்தல், விசாரணை செய்தல், வழக்குத் தொடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல் போன்ற சட்டங்கள் காணப்படும்.

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காக, உத்தேச சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், மேற்குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்கப்படும்.

இந்த சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரகடனம் செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “குயில்வத்தையில் புதிய மதுபானசாலை வேண்டாம்”

ஆ.ரமேஸ்

ஹட்டன் குயில்வத்தை பகுதியில் புதிய மதுபான சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டி தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர்.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அணி பிரதி தலைவியும் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினருமான சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தலைமையில் இப்போராட்டம் சனிக்கிழமை (16) மாலை குயில்வத்தையில் இடம்பெற்றது.

இதன்போது ஹட்டன் குயில்வத்தை பகுதியில் மதுபான சாலை ஒன்றை அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் ஏற்பாடுகள்



முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் இந்த மதுபான சாலைக்கு எதிர்ப்பை தெரிவித்து தாம் வீதிக்கு இறங்கியுள்ளதாகவும், மலையக மக்கள் முன்னணி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ராதாகிருஸ்ணனின் வேண்டுகோளிற்கு இணங்க இந்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுப்பதாகவும் போராட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அதேநேரத்தில் புதிய மதுபான சாலை அமைக்கப்படவுள்ள பகுதியில் பாடசாலை,ஆலயம் காணப்படுவதுடன், அதிகமாக பொதுமக்கள் நடமாடும் இடம் என்பதால் குறித்த பகுதியில் மதுபானசாலையை அமைத்தால் பாரிய பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதுடன் சமூக சீர்கேட்டுக்கும் வழியமைக்கும் எனவே இப்பகுதியில் மதுபானசாலையை அமைக்க விடமாட்டோம் எனவும் இதற்கு சரியான தீர்வு கிடைக்காவிட்டால் மிகப்பெரிய போராட்டம் இப்பகுதியில் இடம்பெறுமென சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# செய்தியால் பலன் மகிழ்ச்சியில் மக்கள்

வி.ரி.சகாதேவராஜா

“குடிநீருக்காக அல்லாடும் கல்லரிப்பு பழங்குடி மக்கள்! அரசியல்வாதிகள் அதிகாரிகள் கவனிப்பார்களா? “ என்ற தலைப்பில் எமது இணையவழி பத்திரிகையில் எமது செய்தியாளர் சகா வினால் எழுதப்பட்ட செய்திக் கட்டுரை யூலை மாதம் 1ஆம் வெளியாகி இருந்தது.

அதனையடுத்து அதே bright future நிறுவனம் ஒருமாத காலத்தில் மீண்டும் புனரமைத்து குடிநீரை வழங்கி வருகிறது.அதற்காக அங்குள்ள சமூக செயற்பாட்டாளர் மலர்ச்செல்வி உள்ளிட்ட சிலர் பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற வெருகல் முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது அந்த கிராமம். கல்லரிப்பு என்பது அக் கிராமத்தின் பெயர். அந்த கிராமத்தில் ஆக 41 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே தமது குடிநீர் மற்றும் தேவைகளுக்காக ஆற்றிலும் ஓடையிலும் தங்கியிருந்தார்கள்.

அந்த மக்களிடம் குடிநீர் பிரச்சினை பற்றி கேட்ட போது அவர்கள் கூறியதாவது...

சுத்தமான நீர் எடுக்க வேண்டுமாக இருந்தால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து அதனை பெற வேண்டிய தேவையுள்ளது. நாளடைவில் பிரதேச சபையூடாக குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளது. அதுவும் சில நேரங்களில தாமதமாகிதான் கிடைக்கும். அவ் வேளைகளில் ஆற்றில் இருந்து நீரை பெறுவோம். எமது ஊரில் பாடசாலை இல்லை.

மாணவர்கள் சீருடைகளை இங்கு கழுவினால் பழுப்பு நிறத்தில் காணப்படும். அருகிலுள்ள பாடசாலைக்கு செல்லும் எமது மாணவர்களுக்கு அது சிரமம்.



ஆசிரியர்கள் சிலவேளைகளில் இந்த நிறம் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு.

இந் நிலையில் இங்கு ஒரு குடிநீர் திட்டம் ஒன்றை மேற்கொள்ள வெளிநாட்டு உதவியோடு அரச சார்பற்ற நிறுவனமொன்று முன்வந்தது. Bright future international UK என்ற நிறுவனம் தான் இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது.

இந்த குடிநீர் திட்டம் 31_3_2023 ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆற்றில் இருந்து நீரை பெற்று சுத்திகரிப்புச் செய்து அதனை வழங்குவதற்காக மின்சார செலவுக்காக மாதம் 100 ரூபாய் வழங்குமாறு மக்களிடம் கோரப்பட்டது. மக்களும் மகிழ்ச்சியில் அந்த நூறு ரூபாய் வழங்கினார்கள்.

ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரே ஒரு மாதம் வரைதான் நீடித்தது. ஒருமாதமே குடிநீர் கிடைத்தது. அதுவும் எதிர்பார்த்த சுத்தமான நீர் இல்லை. அதனக்கூட ஏப்ரல் மாதம் மாத்திரமே அதனை வழங்கியிருந்தார்கள். அதன் பின்பு குடிநீர் வழங்கப்படவில்லை.

தற்போது இக் குடிநீர்த் திட்டமும் நிறுத்தப் பட்டு விட்டது. தற்போது நாங்கள் குடிநீருக்காக வெகு தூரம் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது. இதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று செய்தி வெளியாகியிருந்தது.



# ஆழ் கடலில் விழுந்த மீனவரின் சடலம் மீட்பு

எஸ் தில்லைநாதன்

பலநாள் மீன்பிடிப் படகில் ஆழ்கடல் மீன்பிடிக்கு சென்றிருந்த நிலையில் கடலில் விழுந்து உயிரிழந்த மீனவர் ஒருவரின் சடலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலை கொண்டுவரப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பகுதியில் இருந்து சனிக்கிழமை (16) பிற்பகல் மீன்பிடிக்க சென்ற திருகோணமலையைச் சேர்ந்த 44 வயதுடைய ஆர்.பி.நிமல் கருணாரத்ன என்பவரே நடுக்கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்திருந்தார்.

# எமக்காய் தன்னுயிர் தந்தவனின் நினைவேந்தி ஒரு துளி குருதி

பு.கஜிந்தன்

தமிழர் தேசத்தின் விடுதலைக்காய், உண்ணாநோன்பிருந்து காந்தி தேசத்திற்கு புரியும் மொழியில் அகிம்சையைப் போதித்த தியாக தீபம் அண்ணன் திலீபனின் நினைவேந்தி குருதிக்கொடை பின்வரும் நாட்களில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாட்டை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

செவ்வாய்கிழமை(19) மாணவர் கட்டத் தொகுதி (Students Complex), பல்கலைக்கழக பிரதான வளாகம், யாழ்ப்பாணம்.

26.09.2023 (செவ்வாய்கிழமை) தொழில்நுட்ப பீடம், கிளிநொச்சி வளாகம், யாழ் பல்கலைக்கழகம்.

குருதிக்கொடை செய்ய விரும்பும் மாணவர்கள் தமக்குக் கிட்டிய எவ்விடத்திலும் வழங்க முடியும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# மணல் அகழ்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி - இக்பால் நகர் தொடக்கம் தென்னமரவடி வரை கடற்கரை ஓரமாக மணல் அகழும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) ஈடுபட்டனர்.

மணல் அகழ்வினால் பாதிக்கப்படும் கிராமங்களில் வசிக்கும் மூவின மக்களும் இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.




இதன்போது மிட்வெஸ்ட் கெவி சான்ஸ் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள குறித்த மணல் அகழ்வு அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த மணல் அகழ்வின் மூலம் இயற்கை வளம் பாதிப்பது மட்டுமல்லாமல் மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடுவதோடு வழங்கிய அனுமதிக்கு முரணாக மணல் அகழப்படுவதால் கடற்கரையை அண்டி இருக்கின்ற கிராமங்கள் கடலுக்குள் உள்வாங்கப்படுகின்ற அபாயமும் நிலவுவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள இந்த அனுமதியின் மூலம் மக்களில் வாழ்வாதாரத்தை சுரண்டி தனியார் இலாபம் சம்பாதிப்பதாகவும் எதிர்கால சந்ததிக்கான இயற்கை வளம் இல்லாதொழிக்கப்பட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டினர்.

# மதிலில் வேன் மோதுண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் காயம்

ஹாலிஎல பிரதேச செயலகத்திற்கு முன்பாக வேன் ஒன்று வீதியை விட்டு விலகி மதிலில் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பிரதேசத்தில் வசிக்கும் குழுவினர் படுகாயமடைந்துள்ளதுடன், அவர்கள் லுனுகலவில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு பண்டாரவளைக்கு ஞாயிற்றுக்கிழமை (17) காலை திரும்பிக்கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் தந்தை, தாய், மூன்று மகள்கள் மற்றும் தந்தையின் சகோதரி ஆகியோர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# கடுங்காற்றால் அரங்கு சரிந்தது

எஸ்.கார்த்திகேசு

அம்பாரை திருக்கோவில் பிரதேசத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தம்பிலுவில் தேசிய பாடசாலையின் பார்வையாளர் அரங்கு சரிந்து விழுந்து சேதமடைந்துள்ளது.

திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மாலை வேளையில் தொடர்ச்சியாக பலத்த காற்று வீசுவதுடன் இடையிடையே சிறிதளவான மழையும் பெய்து வருகின்றது.

இந்த அரங்கானது சுமார் 30 வருடங்களுக்கு மேலனான பழமையான பார்வையாளர் அரங்காக காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக மாணவி மரணம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் பயிலும் கிளிநொச்சி கோனாவில் கிராமத்தைச் சேர்ந்த வசந்தகுமார் டலக்சியா என்ற மாணவி தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

சகோதரனால் மீட்கபட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவர் இறந்துள்ளார்.

மாவட்ட வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# சமாதான நீதவான்

எம்.யூ.எம்.சனூண்

புத்தளம் முள்ளிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் வதியும் எஸ்.எச்.எம். அம்ஹர், சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார்.

தனக்கான நியமனக்கடிதத்தினை புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிந்தக அமல் மாயாதுன்னவிடம் இருந்து பெற்றுக்கொண்டார்

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர் புத்தளம் ஹுசைன் ஜே.பியின் புதல்வராவார்.



# பட்டப்பகலில் திருட்டு

எஸ் தில்லைநாதன்

பருத்தித்துறை பிரதேசத்தில் வீட்டுக் கதவை உடைத்து உள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த 10 பவுண் தங்க நகை மற்றும் 30 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணத்தினையும் திருடிச் சென்றுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை(16) பிற்பகல் இரண்டு மணியளவில் பருத்தித்துறை ஐயனார் கலட்டிப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் இருந்த வயோதிபமாது அயல் வீட்டில் இடம்பெற்ற திவச நிகழ்விற்கு



சென்று விட்டு மீண்டும் வீட்டுக்கு வந்தபோது வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கச் சங்கிலி மற்றும் தங்க காப்பு அடங்கலாக 10 பவுண் தங்கநகைகள் , ரொக்கப்பணம் திருடப்பட்டமை தெரியவந்தது.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அலைபேசியை மாணவிகளுக்கு காண்பித்த ஆசிரியர் கைது

ஒபநாயக்க பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் 6ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள் குழுவொன்றிற்கு கையடக்கத் தொலைபேசியில் ஆபாசமான காணொளிகளை காண்பித்த சம்பவம் தொடர்பில் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஒபநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் சுமார் 15 பாடசாலை மாணவிகளிடம் அவ்வப்போது இந்த ஆபாச காட்சிகளை காண்பித்துள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக பெற்றோருக்கு கிடைத்த புகாரின் பேரில் பொலிஸார் விசாரணை நடத்தி சந்தேத்தின் பேரில் ஆசிரியரை கைத்தொலைபேசியுடன் கைது செய்தனர். சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

எஸ்.கார்த்திகேசு

அம்பாறை திருக்கோவில் பொலிஸ்ப் பிரிவுக்குட்பட்ட சாகாமம் குடிநிலம் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கு உள்ளானதில் 21வயது இளைஞன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவிலில் இருந்து சாகாமம் குடிநிலம் நோக்கி சனிக்கிழமை (16) பயணித்த போது பலத்த காற்று காரணமாக வேக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வயல் வெளியில் தூக்கி வீசப்பட்டது. இதன்போதே அவர் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

சாகாமம் குடிநிலம் கிராமத்தைச் சேர்ந்த 21 வயதுடைய தர்மராசா நிதர்சன் என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்த திருகோவில் பொலிஸார். மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.



# போதையில் மிதக்கும் அரசியல் தலைமைகள்

மலையக அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, தாங்கள் என்ன செய்கின்றோம்? தங்களுக்கு வாக்களித்த மக்களதுஉண்மையான பிரச்சினைகள் என்ன? அப்பிரச்சினைகளுக்கு எந்த வழிகளில் சென்று தீர்வை பெற்றுக்கொடுக்கலாம் என்பதெல்லாம் தெரியாமல், தடுமாறிக் கொண்டிருக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

மலையக அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை சமூக வலைத்தள பதிவாளர்கள் விமர்சனங்களை முன்வைத்து கிழித்துக் கொண்டிருக்கின்றனர். அதே சமூக வலைத்தளங்களில், பதிவுகளை இட்டுக்கொண்டிருக்கும் மலையகம் சார்ந்த அரசியல்வாதிகளில் சிலர், பிரச்சினைகளை கண்டும் காணாது, வேறு, வேறு பதிவுகளை இட்டு, இருக்கின்றோம் என காண்பிப்பதிலேயே குறியாக இருக்கின்றனர்.

200 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், பல தோட்டங்களில் அடிப்படை பிரச்சினைகள் கூட இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. ஓரளவுக்கு கல்வி கற்றவர்கள், தோட்டங்களில் இருந்து வெளியேறிவிட்டனர். கொழும்பு, உள்ளிட்ட பெருநகரங்களில் தொழில்புரியும் பெரும்பாலானவர்கள், தோட்டங்களுக்கு வெளியே காணிகளை கொள்வனவு செய்து வீடுகளை நிர்மாணித்துக் கொண்டு இடம்பெயர்ந்துவிட்டனர்.

“மலையகம்-200”ஐ வைத்துக் கொண்டு பலரும் பல நிகழ்வுகளை முன்னெடுத்தனர். அரசியல், தொழிற்சங்க நிகழ்ச்சி நிரல்களை ஒருபக்கத்தில் ஒதுக்கி வைத்துக்கொண்டு அதிலாவது சகலரும் ஓரணியில் திரண்டு இருந்திருக்கலாம். இதில், ஒருசில அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் கூத்தை மறக்கவே முடியாது.

இதற்கிடையே, மலையகத்தையும் தமிழர்கள் செறிந்துவாழும் பிரசேங்களையும் குறிவைத்து, புதிய மதுபான சாலைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியில் குயில்வத்தை எனுமிடத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் மதுபான சாலைக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

ஏனைய பிரதேசங்களில் மக்களோடு மக்களாக, மக்கள் பிரதிநிதிகளும் களத்தில் நின்று எதிர்ப்பை தெரிவிப்பர். மலையகத்தை பொறுத்தவரையில், பிரதேச சபை பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிகளை முன்தள்ளிவிட்டு ஓராமாய் இருந்து வேடிக்கை பார்ப்போரே அதிகமாக இருக்கின்றனர்.

மலையக பெருந்தோட்ட மக்கள், எதிர்ப்புப் போராட்டத்தை ஓரிரு நாட்களுக்கு மட்டுமே முன்னெடுக்கக் கூடியவர்களால் உள்ளனர். அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்வதற்கு பொருளாதார ரீதியில், அவர்களுக்கு பலம் இல்லை. அரசியல் ரீதியிலும் கைகொடுப்பதற்கு முதுகெலும்புள்ளவர்கள் இல்லை. வெறும் அறிக்கை இடுவோரே அதிகமாய் உள்ளனர்.

எதிர்ப்பு தெரிவிப்பவர்களுடன் ஆசிரியர் சமூகம், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், வர்த்தகர்கள், ஏனைய தொழிற்றுறைகளில் இருப்பவர்கள், கைகோர்ப்பதே இல்லை. பொதுவாகக் கூறுவோமாயின், போராட்டம் ஒருங்கிணைக்கப்படாது முன்னெடுக்கப்படும்.

டயகமவில் அமைக்கப்படவிருந்த புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதனை நிறுத்தியுள்ளனர். அந்த சக்தி மக்களிடத்தில் உள்ளது. அதேபோல, சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகளை முற்றாக ஒழிப்பதற்கு ஏனைய இடங்களிலும் குரல் கொடுக்கவேண்டும். எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்.

மலையக மக்களை பிரச்சினைகளே தெரியாமல் மதுபோதையில் மிதக்கவிட்டு, அரசியல் போதையில் மிதப்போர் இருக்கும் வரையிலும் கையேந்தி நிற்கும் நிலைமையே இருக்கும். அதில் மாற்றங்களை ஏற்படுத்துவதே காலத்தின் தேவையாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர்.

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்கு புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்கு பிரதானமானது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# “நல்ல” அரசியல்வாதிகளை மக்கள் ஏன் தேர்ந்தெடுப்பதில்லை?



என்.கே.அஷோக்பரன்

“என்னது அரசியல்வாதிகளுக்கு வாக்களித்துத் தேர்ந்தெடுப்பதும், தேர்ந்தெடுத்த பின் அவர்கள் சரியில்லை என்று புலம்புவதும் ஒரே ஆட்களா?” என்பதுபோலத்தான் உலகளவில் ஜனநாயக நாடுகளில் வாழும் கணிசமானளவு மக்களின் நிலை இருக்கிறது. மக்களே தான் தேர்ந்தெடுக்கிறார்கள், தாம் தேர்ந்தெடுத்தவர்கள் பற்றி மக்களே தான் அசூயையும், அதிருப்தியும் கொள்கிறார்கள். மீண்டும் கொஞ்ச நாளில் தாம் வெறுத்த அதே நபர்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள்.

நல்லவர்கள், வல்லவர்கள் எல்லோரும் அரசியலுக்கு வருவதில்லை. பலரும் வர விரும்புவதில்லை. அதற்குப் பல காரணங்களுண்டு. அது தனத்து ஆராயப்பட வேண்டிய விடயம். ஆனால், அரசியலில் உள்ளவர்களுள், நல்லவர்களைத் தாண்டி, சுத்துமாத்துப் பேர்வழிகள், ஏமாற்றுக்காரர்கள், அப்பட்டமான ஊழல் பேர்வழிகள், கடைந்தெடுத்த ரௌடிகள், வெற்றுவார்த்தை ஜாலக்காரர்கள், தனிநபர் ஒழுக்கமற்றவர்கள், மக்களுக்காக உண்மையாக நன்மையேதுமே செய்திராதவர்கள், வாய்ச்சொல் வீணர்கள், அடிப்படை அரசியல், சட்ட, பொருளாதார அறிவு கூட இல்லாதவர்கள், வேறு தொழில் செய்வதற்கான தகுதியோ, தராதரமோ, இலாயக்கோ இல்லாதவர்கள், ஓய்வுபெற்ற வயோதிபர்கள், எதுவித உறுதியான கொள்கைகளும் இல்லாதவர்கள், கொள்கை வகுப்பு என்றால் என்ன என்றே தெரியாதவர்கள் என சமூகத்திற்கும், மக்களுக்கும் எதுவித பயனும் தராதவர்களை மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பது ஏன்?

உண்மையிலேயே மக்கள் இப்படியானவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியமே கிடையாது. ஆனாலும் தேர்ந்தெடுக்கிறார்கள். நீங்கள் உங்கள் சேமிப்பையெல்லாம் முதலீடு செய்து ஒரு நிறுவனம் ஆரம்பிக்கிறீர்கள், உங்களதும், உங்கள் குழந்தைகளினதும் எதிர்காலம் இந்த நிறுவனத்தின் வெற்றியில்தான் தங்கியிருக்கிறது. அப்படியான சூழலில், அந்த நிறுவனத்தை நிர்வாகம் செய்ய, நீங்கள் நாட்டையாள வாக்களித்த மேற்சொன்ன அரசியல்வாதிகளில் ஒருவரையேனும் தேர்ந்தெடுப்பீர்களா? இது ஒரு மிக முக்கியமான கேள்வி. இதற்கு உங்கள் பதில் “இல்லை” என்றால், நாட்டை ஆள்வதற்கு மட்டும் அத்தகையவர்களைத் தேர்ந்தெப்பது ஏன் என யோசிக்க வேண்டியது அவசியம்.

“நல்ல” அரசியல்வாதிகளை மக்கள் ஏன் தேர்ந்தெடுப்பதில்லை? எந்தவொரு சமூகத்தின் செழுமைக்கும் நல்வாழ்வுக்கும் “நல்ல” அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுப்பது அவசியம். ஆனால் “நல்ல” அரசியல்வாதி என்றால் யார்? இது மிகக் கடினமான கேள்வி. நேர்மை, திறமை, பச்சாதாபம் மற்றும் பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருவர் நல்ல அரசியல்வாதியாவார். இங்கு நேர்மை என்பது சட்டம், மானுட நெறிமுறைகள், தனிநபர் ஒழுக்கம் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இங்கு திறமை என்பது படிப்பறிவு, பட்டறிவு, தலைமைத்துவம், ஆற்றல் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இருப்பினும், பல ஜனநாயக சமூகங்களில், இந்தப் பண்புகளை உண்மையாக உள்ளடக்கிய நபர்களைத் தேர்ந்தெடுப்பது பெரும் சவாலாக இருக்கிறது. இதற்கு பல காரணிகள் பங்களிக்கின்றன. அவற்றில் முக்கியமான சிலவற்றை நாம் அலசிப் பார்க்கலாம்.

ஒன்று, அரசியல் துருவமுனைப்பும், பக்கச்சார்புகளும் ஆகும். அரசியல் துருவமுனைப்பு மற்றும் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு சரணாகதியான விசுவாசம் ஆகியவை ஒரு வேட்பாளரின் குணங்களை புறநிலையாக மதிப்பிடுவதிலிருந்து வாக்காளர்களைத் தடுக்கிறது. குறித்த நபர் எனது இனத்தைச் சேர்ந்தவர், எனது மதத்தைச் சேர்ந்தவர், அவர் மற்ற இனத்திற்கு, மதத்திற்கு எதிராக எனது இனத்திற்கு, மதத்திற்கு ஆதரவாக கத்துகிறார். திருடன், ஊழல் பேர்வழியாக இருந்தாலும் எனது சாதி, இனம், மதத்தைச் சார்ந்தவன். என் இனத்தவன் வராவிட்டால், மற்ற இனத்தவன் வந்துவிடுவான். நான் விரும்பும் கட்சியினால் தேர்தலில் நிறுத்தப்பட்டவன். எனது கட்சித் தலைவர் வாக்களிக்கச் சொன்ன நபர், போன்ற குழுநிலை மனப்பான்மைச் சிந்தனையில் வாக்களிப்பதுதான் பெரும்பாலும் மிகக்கேவலமான அரசியல்வாதிகள் தேர்ந்தெடுக்கப்பட முக்கிய காரணம். குறித்த கட்சியில் குறித்த சின்னத்தில் ஒரு நாயை தேர்தலில் நிறுத்தினாலும், அந்த நாய் வெற்றிபெறும் என்ற சொல்லாடல் இங்கு புதியதல்ல. இது எத்தனை தூரம் கேவலமானதொரு நிலை என்பதை வாக்களிப்பவர்கள் உணர வேண்டும்.

இன்னொரு முக்கிய காரணம், சந்தைப்படுத்தல் மற்றும் அடையாளப் பெயரின் பெறுமதி. பரம்பரை பரம்பரையாக ஒரு அரசியல் குடும்பம் நாட்டைக் கொள்ளையடித்தாலும், அது வெளிப்படையாகத் தெரிந்தாலும், அதையும் மீறி மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பதற்கு சந்தைப்படுத்தலும், அந்த கட்சியின் / அந்தக் குடும்பத்தின் அடையாளப் பெயருக்கு உள்ள செல்வாக்கின் பெறுமதி முக்கிய காரணம். இதனால் இன்று அரசியல் என்பது சந்தைப்படுத்தல் மற்றும் தனிநபர் பிம்பத்தைக் கட்டியெழுப்பும் விஷயமாக மாறிவிட்டது. அரசியல்வாதிகள் உண்மையான திறமை அல்லது கொள்கைப்பிடிப்பைக் காட்டிலும், தம்மைப்பற்றிய சாதகமான பிம்பத்தை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கிறார்கள். கவர்ச்சி மற்றும் கவர்ச்சிகரமான சொல்லாட்சி சில நேரங்களில் பொருள் அல்லது தகுதிகளின் பற்றாக்குறையை மறைக்கப்பயன்படுகிறது. இன்று அரசியல்வாதிகள் எல்லாம் நடிகர்களைப் போல பன்ஞ்ச் வசனங்கள் பேசுகிறார்கள். அதற்குள் விஷயமே இருக்காது, ஆனால் பேசுவார்கள். பொருளாதாரத்தின் அரிச்சுவடிகூட தெரியாத, புரியாத “தலைவர்கள்” எல்லாம், மணிக்கணக்கில் பொருளாதாரம் பற்றியும், வறுமை ஒழிப்புப் பற்றியும் பேசுவார்கள். வாக்காளர்கள் கொள்கைகள் மற்றும் திறன்களை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யாமல் ஒரு கவர்ச்சியான வேட்பாளரிடம் ஈர்ப்புக் கொண்டு வாக்களிப்பதால் ஏற்பட்ட விளைவு இது. “பில்டப்பிலேயே” அரசியலைக் கொண்டு நடத்தும், மிகக் கேவலமான அரசியல்வாதிகள் எல்லாம் “தலைவர்கள்” என்று தம்மைத்தாமே சொல்லிக்கொண்டு தம்மைப் போன்றவர்களையே தொண்டரடிப்பொடிகளாகக் கொண்ட அடிவருடி இரண்டாம்கட்ட அரசியல்வாதிகளைக் கொண்டு அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், மக்களின் கருத்தை உருவாக்குவதிலும், மக்கள் மத்தியில் பிம்பங்களை உருவாக்குதிலும் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஊடகங்கள் பக்கச்சார்பானதாகவோ / பரபரப்பானதாகவோ இருக்கவே விரும்பும் தன்மையை நாம் அவதானிக்கலாம். உண்மைகளை முன்வைப்பதற்குப் பதிலாக மிகைப்படுத்தலை உருவாக்குவதில் ஊடகங்கள் கவனம் செலுத்துகிறன. கவனமெடுக்கத் தேவையற்ற வேட்பாளர்களுக்கு பிரபல்யத்தை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அவர்களை நோக்கி வாக்காளர்களின் கவனத்தை திசை திருப்புகின்றன. உதாரணத்திற்கு, இன்று மலையக மக்களின் மிகப்பெரிய பிரச்சினைகளுள் முக்கியமானது, 200 வருடங்கள் தாண்டியும் அவர்கள் வரிசை அறைகளில் (“லைன்களில்”) வீடற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் அவல நிலை. இதைப் பற்றிப் பேசி தீர்வு கொடுக்கக் கூடிய நிலையில் அனைத்து மலையக அரசியல்வாதிகளும் ஏதோவொரு காலகட்டத்தில் இருந்தார்கள். அதாவது ஆளும் அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தார்கள், இருக்கிறார்கள். ஆனால் அதைச் செய்ய அவர்களால் முடியவில்லை. தமக்கான வரப்பிரசாதங்களை அமைச்சர்களாக அனுபவித்துக்கொண்டு இருந்துவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால் இதே நபர்கள், ஒரு சதத்திற்குப் பயனில்லாத பிரச்சினைகளையெல்லாம், ஏதோ மக்களின் வாழ்வாதாரத்தையே தாக்கியழிக்கும் பிரச்சினையைப் போல பூதாகாரப்படுத்தி, தம்மை ஏதோ பெரும் புரட்சியாளர்களாகக் காட்டும் பிரச்சார உத்திகளைக் கையாண்டு, மக்களை முட்டாளாக்குகின்றனர். இதற்கு ஊடகங்கள் உறுதுணையாக நிற்கின்றன. இதுதான் இன்றைய அரசியலின் பேரவல நிலை.

மேலும், ஊடக நிறுவனங்கள் தங்கள் சொந்த நலன்கள் அல்லது அரசியல் தொடர்புகளைக் கொண்டிருக்கலாம், இது வேட்பாளர்களின் சித்தரிப்பை பாதிக்கலாம். இதை இலங்கையின் அன்றாட அரசியலில் நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவை எல்லாம் மக்கள் “நல்ல” அரசியல்வாதிகளை அடையாளங்கண்டுகொள்ள முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன.

ஆகவே “நல்ல” அரசியல்வாதிகள் இல்லை என்று சொல்லும் மக்கள், நல்ல அரசியல்வாதிகள் வேண்டுமென்றால், அவர்களைத் தேடித் தேடி ஆதரிக்க வேண்டியது அவசியம். கருங்கற் பாறைகள் பெரிதாக இருக்கும், அனைவருக்கும் பெரிதாகத் தெரியும். ஆனால் விலைமதிப்பற்ற இரத்தினங்கள் எங்கோ ஒளிந்திருக்கும், அவற்றைத் தேடித் தேடித்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்! “நல்ல” அரசியல்வாதிகளைத் தெரிவுசெய்வதும் அப்படிப்பட்ட காரியம்தான். நல்லவனுக்கும், வல்லவனுக்கும் தன்னை நல்லவன், வல்லவன் என்று சொல்லித் திரிய வேண்டிய தேவை இல்லை. இதையும் மக்கள் கருத்தில்கொள்வது அவசியம். இனியாவது மக்கள் விளித்துக்கொள்ள வேண்டும்.

## கடிதங்கள்

### ஆசன முன்பதிவு செய்ய முடியவில்லை




கொழும்பு கோட்டையில் இருந்து தலைமன்னாருக்கான புகையிரத சேவை சுமார் 9 மாதங்களின் வெள்ளிக்கிழமை(15) ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மன்னாரிலிருந்து கொழும்பிற்கு ஆசன முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

பல தரப்பினரின் தொடர் கோரிக்கைகளுக்கு அமைவாக, ஜனாதிபதி ரணில் மடு திருத்தலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய கொழும்பில் - தலைமன்னாருக்கு புகையிரத சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1ஆம் வகுப்பு குளிரூட்டப்பட்ட ஆசன முன்பதிவு மற்றும் 2 ஆம் வகுப்பு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மன்னாரிலிருந்து இருந்து மக்கள் பணயங்களை தொடர முடியும் என அறிவிக்கப்பட்டது.

எனினும் கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கு ஆசன முன்பதிவுகளை மேற்கொள்ள முடிந்த போதிலும் தலைமன்னாரிலிருந்து முன்பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தலைமன்னார் - மடு வரையிலான புகையிரத நிலையங்களில் ஆசன முன்பதிவு செய்யும் வசதிகள் இது வரை இல்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ரொசேரியன் லெம்பட்



நிலைபேறான நடவடிக்கைகளை

# SLT-MOBITEL தொடர்ந்தும் முன்னெடுப்பு

சமூகத்திலும் சூழலிலும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் அங்கமாக, SLT-MOBITEL இனால் பல்வேறு நிலைபேறான சூழல், சமூக, ஆளுகை (ESG) நடவடிக்கைகள், கம்பளை, ஜினராஜ மகா வித்தியாலயத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் மூன்று திட்டங்கள் அடங்கியிருந்ததுடன், பல பெறுமதி வாய்ந்த பங்காளர்களுடன் SLT-MOBITEL கைகோர்த்து, அந்த சமூகத்தில் நீடித்து நிலைத்திருக்கும் தாக்கத்தையும், நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. செயற்திட்டங்களில் STEM (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) தொடர்பான கல்வி விழிப்புணர்வுத் திட்டங்களை முன்னெடுப்பது, மாணவர் தொழில்முயற்சியாண்மையை ஏற்படுத்துவது, “மனமிருந்தால் புத்தகமொன்றை வழங்குங்கள்” எனும் தொனிப்பொருளில் புத்தக நன்கொடைத் திட்டம் வாசிப்பு கலாசாரத்தை மேம்படுத்தும் வகையிலும், ஒகில்வி பொது உறவுகள் ஸ்ரீ லங்கா உடன் இணைந்து மர நடுகைத் திட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

SLT சார்பாக இந்நிகழ்வில் R1-பிராந்திய செயற்பாடுகள் பொது முகாமையாளர் அனுருத்த ரத்நாயக்க மற்றும் பொது உறவுகள் பிரதி பொது முகாமையாளர் நிலந்தி ஜயகொடி ஆகியோர் பங்கேற்றிருந்ததுடன், பாடசாலையின் அதிபர், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுடன், ஒகில்வி பொது உறவுகள் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் அதிகாரிகள், கம்பளை SLT-MOBITEL வாடிக்கையாளர் கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் SLT-MOBITEL அதிகாரிகள் மற்றும் STEMUP மையத்தின் தன்னார்வ செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

“நாடு முழுவதிலும் சுவாசத்தையும், உரத்தையும் பயிரிடுவோம்” எனும் நாமத்தின் கீழ் கம்பளையில் மர நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது SLT-MOBITEL இன் சூழல் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்பின் அங்கமாக அமைந்திருந்தது. வன அழிப்பை நிவர்த்தி செய்வது மற்றும் பசுமையான மற்றும் ஆரோக்கியமான சூழல் கட்டமைப்புக்கு பங்களிப்பு வழங்குவது போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் SLT-MOBITEL இனால் 1700 மரங்கள் இதுவரையில் நடப்பட்டுள்ளதுடன், மொனராகலை, உமந்தாவ, அனுராதபுரம், குண்டசாலை, மீரிகம மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரஜைகளின் SLT–MOBITEL

# வாழ்வுக்கு வளமூட்டுகின்றது

தேசத்துக்கு சிரேஷ்ட பிரஜைகள் ஆற்றிய பெறுமதி வாய்ந்த பங்களிப்புகள் மற்றும் அர்ப்பணிப்பான சேவைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, புத்தாக்கமான புதிய பக்கேஜை அறிமுகம் செய்துள்ளது. அதனூடாக சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்வுக்கு வளமூட்ட எதிர்பார்த்துள்ளது.

இந்த விசேட பக்கேஜில், சகாயமான விலையிடல் போன்ற முக்கியமான உள்ளம்சங்கள் அடங்கியுள்ளன. ரூ. 300 (வரிகள் தவிர்த்து) எனும் மாத வாடகைக்கு, சிரேஷ்ட பிரஜைகளுக்கு தமது தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும். மொபிடெல் மற்றும் ஏனைய வலையமைப்புகளுக்கு 1000 நிமிடங்கள் வெளிச் செல்லும் அழைப்புகளை இந்த பக்கேஜ் வழங்குவதுடன், அதனூடாக சிரேஷ்ட பிரஜைகளுக்கு தமது குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடன் எந்நேரத்திலும் தொடர்பில் இருக்க முடியும்.

> **தொடர்பில் வைத்திருப்பதற்கு அவசியமான சாதனங்களை வழங்குவதுடன், தகவல் அறிந்து கொள்ளவும் ஈடுபாட்டில் இருப்பதற்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது**

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பரீட்சியமான சிரேஷ்ட பிரஜைகளுக்கு எந்த வலையமைப்புக்கும் 1000 இலவச SMS களை அனுப்பும் சுதந்திரம் இந்தப் பக்கேஜினூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிரேஷ்ட பிரஜைகள் ஒன்லைனில் தொடர்பில் இருப்பதன் முக்கியத்துவத்தை SLT-MOBITEL உணர்ந்துள்ளது. பக்கேஜில் 2GB எனிடைம் டேட்டா பாவனை வழங்கப்பட்டுள்ளதுடன், சிரேஷ்ட பிரஜைகளுக்கு டிஜிட்டல் உள்ளம்சங்களுடன் தொடர்பில் இருக்கும் வசதியை வழங்கியுள்ளது.

தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியில், புதிய பக்கேஜ் செலவு சிக்கனமான தீர்வாக அமைந்துள்ளது. எந்தவொரு வலையமைப்பு குரல் அழைப்புகளுக்கும் சிக்கனமான வகையில் ரூ. 1.50/- கட்டணம் மட்டும் அறவிடும் வகையில் அமைந்துள்ளது. மேலும், எந்த வலையமைப்புக்கும் SMS அல்லது MMS அனுப்புவதற்கு 20 சதம் மாத்திரமே அறவிடப்படும்.



உலகம் தொழில்நுட்ப ரீதியில் வேகமான முன்னேறி வரும் நிலையில், டிஜிட்டல் இடைவெளியை இல்லாமல் செய்வதற்கு SLT-MOBITEL தன்னை அர்ப்பணித்துள்ளது. சிரேஷ்ட பிரஜைகளுக்கான முன்னணி புதிய பக்கேஜினூடாக, ஓய்வூதியம் பெறுவோருக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் தமது அன்புக்குரியவர்களுடன் தொடர்பில் இருப்பதை உறுதி செய்வதற்கான அர்ப்பணிப்பை SLT-MOBITEL மீள உறுதி செய்துள்ளது. அத்துடன் அவர்களின் பிரத்தியேகமான தொடர்பாடல் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் வசதியளிக்கின்றது. மாறுபடும் டேட்டா தேவைப்பாடுகளை உள்வாங்கி, இந்த பக்கேஜில், மேலதிகமாக பயன்படுத்தும் ஒவ்வொரு MB க்கும் 30 சதம் வீதம் கட்டணம் அறவிடப்படும்.

சிரேஷ்ட பிரஜைகளுக்கான டிஜிட்டல் பகுதியை மாற்றியமைப்பதற்கான உள்ளம்சத்தை இந்த புதிய பக்கேஜ் கொண்டுள்ளது. தொடர்பில் வைத்திருப்பதற்கு அவசியமான சாதனங்களை வழங்குவதுடன், தகவல் அறிந்து கொள்ளவும் ஈடுபாட்டில் இருப்பதற்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

# உலகை ஆட்கொள்ளும் தொடர்பு சாதனங்கள்





சுப்பிரமணியன் ஜனுர்ஷா
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உள்ளங்கையில் உலகம் என விஞ்ஞான விந்தையின் விருத்தி நோக்கிய பாதையில் இன்றைய உலகமானது வியாபித்திருக்கின்றது. மனிதர்களிடையிலான ஊடாட்டமானது ஒவ்வொரு தனி நபர் வாழ்க்கை வட்டத்திற்கும் அவசியமான ஒன்றாகும். இவ் இடைவினையாற்றலுக்கு தொடர்பாடல் தவிர்க்க முடியாத அங்கம் என்ற வகையில், தகவல் பரிமாற்றச் செயற்பாட்டின் ஊடகமாக தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்பாடலிற்கு உபயோகிக்கப்படுவதனால் இவை 'தொடர்பு சாதனங்கள்' என பெயர் பெற்றது போலும். தொலைவிலுள்ள நபருடன் இலகுவில் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பினை தொடர்பு சாதனங்கள் ஏற்படுத்தி தந்துள்ளமையினால் இவை 'தொலை தொடர்பு சாதனங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன.

தீ, புகை, பறை, ஒலி, குகை ஓவியம், புறா, தந்தி, கடிதம் என ஆதிகால மனிதன் இவ்வாறான தகவல் பரிமாற்றத்தினுள் கட்டுண்டு விடாமல் படிப்படியாக நவீன தொழில்நுட்பத்தின் உச்சத்தையே தொட்டுவிட்டான். இன்றைய நவீன யுகமாம் நாம் வாழும் இருபத்தொன்றாம் நூற்றாண்டானது மானுட பிரசன்னம்மற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் அளவிற்கு நாளுக்கு நாள் தொடர்பாடல் சாதனங்களில் வளர்ச்சி விருத்தியடைகின்றது இன்றைய காலங்களில் தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி, தொலை நகல், வானொலி, இணையம், ப்ளூடூத், வைபை, மொடம், ரவுட்டர், கம்பியற்ற தொடர்பாடல், முதலான தொடர்பு சாதனங்கள் உலகையே ஆட்சி செய்கின்றது என்பது பிரம்மிக்க வைக்கிறது.

ஆரம்பத்தில் ஒரு வழி தொடர்பாடலுக்காக உருவாக்கப்பட்ட இத்தொடர்பாடல் சாதனங்கள் இன்று இரு வழி தொடர்பாடலாக விருத்தியடைந்தமை தொடர்பாடல் சாதனங்கள் வழியே சாத்தியமாக்கப்பட்டது. அறிவியல் சார்ந்த வாழ்க்கை வட்டத்தினுள் இத்தொடர்பாடல் சாதனங்களானவை மனிதனது சிக்கலான வாழ்க்கை பரப்பை இலகுப்படுத்திய வண்ணம் உள்ளன. மனித வாழ்க்கையின் கல்வி, பொருளாதாரம், மருத்துவம், ஆன்மீகம், சினிமா, அரசியல் என பல துறைகளின் தகவல் பரிமாற்றத்தை கையாளும் ஊடகமாக இத்தொடர்பாடல் சாதனங்கள் வலம் வருகின்றன.

அந்தவகையில், உலகளாவிய காட்னர் மற்றும் ஆர்ஸ் டெக்னிக் காவால் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் 1975 ஆம் ஆண்டு தொடர்பு சாதனங்களை நுகர்வோர் 0 ஆக இருந்த நிலையில் இன்றைய 21ம் நூற்றாண்டில் இதன் நுகர்வோர் எண்ணிக்கை அளவிலும் தொடர்பு சாதனங்கள் முன்னேற்றத்திலும் மாற்றம் கண்டுள்ளன. மக்களது தகவல் தேவைகளை பூர்த்திப்படுத்தும் ஊடகமாக காணப்படுகின்ற தொடர்பு சாதனங்களானவை நாணயத்தின் இரு பக்கங்களைப் போல பல பரிமாணங்களில் சாதகம், பாதகம் ஆகிய விளைவுகளை தருகின்றன.

அதாவது, இத்தொடர்பு சாதனங்களானவை மனித செயல்பாடுகளுக்கு அதிகம் உறுதுணையாக அமைகின்றன. அதாவது, உள்நாடு, வெளிநாடு சார்ந்த அனைத்து செய்திகளையும் உடனுக்குடன் இணைய பயன்பாட்டுடன் தொடர்பு சாதனங்களின் வழியே பார்வையிடுவதற்கும், பரப்புகை செய்வதற்கும் வழி வகுத்துள்ளன. தனிமனித மற்றும் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் இத்தொடர்பாடல் சாதனங்கள் பெரிதும் உதவுகின்றமையினை அவதானிக்கலாம். அத்தோடு, கற்றல் சார் செயற்பாடுகளில் இத்தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாடானது அளப்பரியதாக மாற்றமடைந்துள்ளது என்றே கூற வேண்டும். மாணவர்களது கல்வி செயற்பாடுகள் 99% தொடர்பாடல் சாதனங்களின் பங்களிப்புடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. தங்களது கற்றல் குறிப்புகள், பரீட்சை வினாத்தாள்கள், படங்கள், நிகழ்நிலை வகுப்புகள் போன்றவற்றை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இடையே பரிமாறிக் கொள்வதற்கு இத்தொடர்பாடல் சாதனங்கள் உதவுகின்றன.

பாடசாலை ஆசிரியர் ஒருவரிடம் மாணவர்கள் மத்தியில் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு எத்தகையது பற்றி வினவிய போது, 'ஆரம்பத்தில் இருந்த மாணவர்களுக்கும் இன்றைய மாணவர்களுக்கும் ஒப்பீட்டளவில் வேறுபாடு உள்ளது எனவும் மாணவர்கள் தொலைபேசியில் மூழ்கியதுடன் அவை கல்விச் செயற்பாட்டுக்கு வலு சேர்ப்பது மாத்திரமன்றி தீயவழியில் கொண்டு சேர்ப்பதற்கும் சான்றாக உள்ளது' என குறிப்பிட்டுருந்தார்.

ஏனையோருடன் தொடர்பு கொள்வதற்காக உருவாக்கப்பட்ட தொலைபேசி அதன் சேவைகளை விருத்தி செய்து கொண்டதுடன் ஒரே இடத்தில் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும் ஆற்றலும் இன்றைய தொலைபேசிகளின் வழியே சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இன்றைய நவீன யுகத்தில் சாதாரணமாக அனைவரது மத்தியிலும் புலக்கத்தில் உள்ள ஒரு தொடர்பு சாதனமாக தான் திறன் பேசிகள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் 85.88% சனத்தொகையில் 6.92 பில்லியன் மக்கள் திறன் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றன என புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன.

இணைய பயன்பாட்டின் வழியே வலைத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல் சேவையினை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைவதுடன் இவை தகவல் சேகரிப்பிற்கும் பரிமாற்றத்திற்கும் சுதந்திரப் போக்கினை உருவாக்கி உள்ளன. நவீன தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக சமகாலத்தில் ஊடக ஒருங்கிணைவு(media convergent) ஊடாக தொடர்பு சாதனங்களுடன் இணைந்து அச்சூடகங்களும் செய்தி பரப்புகை செயற்பாட்டை மேற்கொள்கின்றதை அவதானிக்கலாம். இதனால் மக்கள் மத்தியில் செலவுகள் குறைந்து இணையம் வழியாக செய்திகளை பார்வையிடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதுடன் மறுபக்கம் அச்சூடகங்கள் குறைவடைந்தும் செல்கின்றது.

தொடர்பு சாதனங்களின் மூலம் வங்கி செயற்பாடுகள் யாவும் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ATM மூலம் வங்கி சேவை மேற்கொள்ளப்படுவதுடன் இன்றைக்கு ஆன்லைன் சேவை அதாவது E- Banking வங்கி சேவையுடன் இணைந்து செயற்படும் அளவிற்கு தொடர்பு சாதனங்கள் மக்கள் மத்தியில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கை நுண்ணறிவு(AI) ஊடாக தொடர்பாடல் சாதனங்கள் வினைத்திறன் மிக்கதாக மாற்றமடைவதுடன் 4G அலைக்கற்றைகள 5G வரை வளர்ச்சி கண்டு தகவல் தொழில்நுட்ப புரட்சியை தோற்றுவித்துள்ளது.

தொடர்பு சாதனங்கள் அவசரமாக பயணிக்கின்ற மக்களது வாழ்க்கைச் சூழலுக்கு அமைவாக துரித சேவைகளுடன் மக்களது தேவைகளை நிறைவேற்றுவனமாக அமைந்தாலும் இளம் தலைமுறையினரும் எதிர்காலமும் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது சற்று கூர்ந்து கவனிக்க வேண்டிய விடயம் தான். ஏனைய தொடர்பு சாதனங்களின் விருத்தியை நோக்கி நகர்கின்ற உலகம் அதன் பாதக விளைவுகளை பற்றி சிந்திப்பதை மறந்து பயணிக்கின்றன.

அதிகரித்த தொடர்பு சாதன பயன்பாடானது அடுத்த தலைமுறையினரது வாழ்க்கை தரத்தையே மாறுபட்ட கோணமாக்கிவிடும் அச்சம் எழுந்துள்ளது. ஏனெனில், பெரும்பாலான சிறார்கள் கல்வி செயற்பாட்டிற்காக தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதற்கு மாறாக தங்களது வாழ்க்கையை தொடர்பு சாதனங்களில் முழுநேரமாக காலாவதியாக்குகின்றமையினை அதிகம் அவதானிக்கின்றோம். இவர்கள் அதிகளவில் தொலைபேசிகளையும் கணணிகளையும் தகாத தொடர்புகளுக்காகவும், முகநூல், வீடியோ கேம்ஸ் போன்றவற்றிக்காக நாடுவதுடன் தங்களது கல்வி செயற்பாடுகளில் இருந்து திசை திருப்பப்படுகின்றனர்.

முகம் திரிந்த நபருடன் பேசுவதை விடுத்து முகநூலில் முகவரியற்ற நபருடன் முணுமுணுக்கும் உலகம் இது. இதனால் அதிகளவிலான தகவல்கள் தவறான கையாளுகைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன், தகாத உறவு முறைகள், தகவல் திரட்டு, பண மோசடிகள், அபாச படங்கள் பார்த்தல், ர்யஉம்பெஇ டீயமெ ளுஉயஅ என்பவற்றிற்கு ஆளாகின்ற போக்கும் அதிகரித்துள்ளன. தகாத உறவு நிலைகளினால் அதிகரித்த விவாகரத்து, தற்கொலைகள் மற்றும் மன உளைச்சலுக்கும் தள்ளப்படுகின்றனர்.

4பு,5பு வரை விரிவடைகின்ற அலைக்கற்றைகள் காரணமாக வலையமைப்பு கோபுரங்கள் அதிகரிப்பதுடன் இவை மனித உடல் நலத்திற்கும், சுற்றுச்சூழல் மாசடைவிற்கும் தீங்கு பயப்பதாக அமைவதுடன் உயர பறக்கும் பறவை இன உயிர் வாழ்கைக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது. இதனையே எந்திரன் 2.0 திரைப்படம் மிக மைனூட்டாக வித்தியாசமான உத்தி முறையை கையாண்டு சித்தரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. மேலும் தொடர்பு சாதனங்களில் உள்ளடப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவானது மக்களது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை பகுப்பாய்வு செய்து தங்களது கட்டுப்பாட்டிற்குள்ளேயே மக்களை வைத்துள்ளமையினால் மக்களது தகவல்களுக்கு பாதுகாப்பின்மை நிலவுவதுடன் தொடர்பு சாதன பயன்பாட்டிற்கான சுதந்திரப் போக்கும் காணப்படுவதில்லை.

சிந்திக்கும் ஆற்றலை முடக்கி தேடலை அதிகரித்துள்ள தொடர்பு சாதனங்களானது எதிர்கால தலைமுறையினரது சிந்திக்கும் ஆற்றலினை இலக்கச் செய்கின்றது என்றே கூற வேண்டும். அதிகரித்த தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டினால் உளரீதியான பாதிப்புகள், நோய் நிலைகளுக்கு ஆளாக்கி விடுகின்ற போக்கும் தொடர்பு சாதனங்களின் வழியே ஏற்படுகின்றது. கண், முள்ளந்தண்டு பிரச்சனைகள், நரம்பு தளர்ச்சி, தலைவலி, மயக்கம் போன்ற உடல் சீர்கேடுகளையும் தொடர்பு சாதனங்கள். பரிசாகத் தந்திருக்கின்றன

இவ்வாறாக பல்வேறு தரப்புகளிலிருந்து தொடர்பு சாதனங்களானவை ஒரு பக்கம் நன்மை மறுபக்கம் தீமையும் தருவதில் தவறுவதில்லை என்பதனால், மூளைக்கு ஓய்வு கொடுக்கும் தொடர்பு சாதனங்களில் மூழ்கி எதிர்காலத்தை வீணடிப்பதை தவிர்த்து பகுத்தறிவுடன் 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்ற பழமொழியினை கருத்தில் கொண்டு விழிப்புணர்வுடன் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துகின்ற போது அதன் சவால்களில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமானதும் விருத்தியமானதுமான விஞ்ஞான உலகை உருவாக்க முடியும் என்பது அனைவராலும் உணரப்பட வேண்டிய ஒன்றாகும்.

அமெரிக்கா

# நெருப்பு வளையங்களை சுழற்றி கின்னஸ் சாதனை

உலக அளவில் மக்களால் பாராட்டப்பட்ட சர்க்கஸ் கலைஞர்களின் கிரேஸ் குட் என்ற பெண் சிறப்பு வாய்ந்தவர். அமெரிக்காவை சேர்ந்த இவர் 18 வயதில் தனது சர்க்கஸ் பயணத்தை தொடங்கி அசாதாரண சாகசங்கள் மற்றும் துணிச்சலான நெருப்பு வளையங்களை செய்து அனைவரையும்



வியப்பில் ஆழ்த்துவார். பார்வையாளர்களை பிரமிக்க வைக்கும் இவரது சாகச காட்சிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை.

தற்போது 30 வயதாகும் கிரேஸ் குட் ஒரே நேரத்தில் அதிக நெருப்பு வளையங்களை சுழற்றி கின்னஸ் சாதனை படைத்துள்ளார். 8 நெருப்பு வளையங்களை தன் உடலை சுற்றி தொடர்ந்து இயக்கி அவர் இந்த சாதனையை படைத்துள்ளார். மேலும் பந்தின் மீது நின்று வியக்கத்தக்க வகையில் 28 ஹூலா வளையங்களை வெற்றிகரமாக சுழற்றி மற்றொரு சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

ஆந்திரா

# மிகப்பெரிய விநாயகர் சிலை

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் கஜூவாக்காவில் 17 அடி உயரமுள்ள ஸ்ரீ அனந்த பஞ்சமுக மகா கணபதி சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விநாயகர் சிலையை வடிவமைப்பதற்காக அனக்கா பள்ளி மாவட்டம் மற்றும் கொல்கத்தாவில் இருந்து 5 தொன் எடையுள்ள களிமண் கொண்டுவரப்பட்டு சிலை செய்யப்பட்டுள்ளது.

தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த பிரபல சிலை வடிவமைப்பு கலைஞர் தலைமையில் சிலையை வடிவமைப்பதற்காக மேற்குவங்கம் மற்றும் ஒடிசாவை சேர்ந்த 24 பேர் கொண்ட குழுவினர் சிலை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தியாவில் மிகப்பெரிய விநாயகர் சிலை இதுதான் என விழாக்குழுவினர் தெரிவித்தனர்.



இங்கிலாந்து

## 1.1 மில்லியனுக்கு ஏலம் போன டயானாவின் ஸ்வெட்டர்





இங்கிலாந்து அரசர் சார்லசின் முதல் மனைவி டயானா 1997-ம் ஆண்டு கார் விபத்தில் தனது 36-ம் வயதில் உயிரிழந்தார். இந்நிலையில் இளவரசி டயானா பயன்படுத்திய ஆடைகள் மற்றும் பொருட்கள் ஏலத்திற்கு வருவதும் அவை அதிக விலைக்கு ஏலம் வாங்கப்படுகின்றது.

அந்த வகையில் இங்கிலாந்து ஆடம்பர பின்னலாடை நிறுவனம் தயாரித்து இளவரசி டயானா அணிந்த சிகப்பு நிற ஸ்வெட்டர் ஒன்று கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏலம் விடப்பட்டது.

1981-ம் ஆண்டு இளவரசர் சார்லசஸூடன் கோல்ப் போட்டி ஒன்றுக்கு டயானா இந்த ஸ்வெட்டரை அணிந்து சென்றிருந்தார். வரிசையாக வெள்ளை நிற ஆடுகள் படம் போட்ட இந்த ஸ்வெட்டரில் ஒன்று மட்டும் கருப்பு நிறத்தில் இருந்தது. இது அப்போது பரபரப்பாக பேசப்பட்டிருந்தது.

1983-ம் ஆண்டு இந்த ஸ்வெட்டரை மீண்டும் ஒரு நிகழ்ச்சியில் டயானா அணிந்து சென்றிருந்தார். தற்போது அந்த ஸ்வெட்டர் ஏலத்திற்கு வந்த போது 1.1 மில்லியன் அமெரிக்கன் டொலருக்கு ஏலம் போனது.

துருக்கி

## ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகர்கள் 15 பேர் ராஜினாமா




2014-ம் ஆண்டு முதல் துருக்கியில் ஜனாதிபதி தாயீப் எர்டோகன் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. இவர் கடந்த ஜூன் மாதம் நடந்த தேர்தலில் போட்டியிட்டு மூன்றாவது முறையாக ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ளார். இதனையடுத்து அங்கு புதிய அமைச்சரவை அறிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பு மந்திரி பதவி வகிக்காத 90 சதவீதம் பேருக்கு இந்த முறை புதிதாக பொறுப்பு வழங்கப்பட்டது. இதனால் முந்தைய அமைச்சரவையில் இருந்த பலரும் தற்போது ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகர்களாக இருந்து வருகின்றனர். எனினும் அமைச்சரவையில் பதவி வழங்காததால் அவர்கள் அதிருப்தியில் இருந்து வந்தனர்.

இந் நிலையில் ஜனாதிபதி தாயீப் எர்டோகனின் ஆலோசகர்கள் 15 பேர் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக அங்குள்ள ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உத்தர பிரதேசம்

# முடி வளர்த்து சிறுவன் சாதனை





உத்தர பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டா நகரை சேர்ந்த சிடக்தீப் சிங் சாஹல் என்ற சிறுவன் தலைமுடி வளர்த்து உலக சாதனை படைத்துள்ளான். சிடக்தீப் சிங் சாஹல்க்கு சிறு வயது முதலே நீண்ட தலைமுடி இருந்துள்ளது இதனால், கவலையடைந்த சாஹல், தனது பெற்றோரிடம் அவற்றை நீக்கி விடும்படி கேட்டிருக்கிறார்.

ஆனால் வளர்ந்ததும், அதன்மீது தனி கவனம் செலுத்த தொடங்கியதுடன், தலைமுடி தன்னில் ஒரு பகுதி என்ற உணர்வும் ஏற்பட்டுள்ளது.

சாஹலின் தலைமுடி தற்போது 146 சென்டி மீட்டர் (4 அடி 9.5 அங்குலம்) அளவுக்கு வளர்ந்துள்ளது. இந்நிலையில், சாஹலின் நீண்ட தலைமுடியானது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. இதுபற்றிய வீடியோ ஒன்றை கின்னஸ் உலக சாதனை அமைப்பு வெளியிட்டுள்ளது. இதில் சாஹல், தன்னுடைய தலைமுடி பராமரிப்பு பற்றி பேசியுள்ளார்.

சக்திவாய்ந்த தலைவர்கள் பட்டியலில்

## மோடிக்கு முதலிடம்



அமெரிக்காவை மையமாக வைத்து செயல்படும், ‘மார்னிங் கன்சல்ட்’ என்ற வர்த்தக புலனாய்வு நிறுவனம், அமெரிக்கா, இந்தியா, பிரான்சு, ஜெர்மனி உள்ளிட்ட 22 நாடுகளின் ஆட்சியாளர்களின் செயல்பாட்டை ஆய்வு செய்து வருகிறது.

இதற்காக, அந்தந்த நாடுகளில் (Nationally representative samples) உள்ள கணிசமான மக்களிடம் ஆன்லைன் மூலம் கருத்துக் கணிப்பு மேற்கொள்கிறது. அமெரிக்காவில் தோராயமாக 45,000 பேரிடமும், இதர நாடுகளில் 500 - 5000 வரையிலான மக்களிடம் கருத்துக் கணிப்பு எடுக்கப்பட்டுள்ளது

அந்த வகையில், இந்தாண்டுக்கான பட்டியலில் பிரதமர் மோடி முதலிடம் பிடித்துள்ளார். சுவசர்லாந்து ஜனாதிபதி இரண்டாவது இடத்திலும், மெக்சிகோ ஜனாதிபதி மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.



நியூசிலாந்துக்கெதிரான தொடருக்கான

## பங்களாதேஷ் குழாமில் தமிம், மகமதுல்லா

நியூசிலாந்துக்கெதிரான பங்களாதேஷின் ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான முதலிரண்டு போட்டிகளுக்கான பங்களாதேஷின் குழாமில் தமிம் இக்பால், மகமதுல்லா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், வழமையான அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் மற்றும் முஷ்பிக்கூர் ரஹீம், மெஹிடி ஹஸன் மிராஸ், தஸ்கின் அஹ்மட், ஹஸன் மஹ்மூட், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. லிட்டன் தாஸ் தலைமை தாங்குவதுடன், சௌமியா சர்க்கார், நுருல் ஹஸன் ஆகியோர் மீள அழைக்கப்பட்டதுடன், அஃபிஃப் ஹொஸைன், மொஹமட் நைம் ஆகியோர் குழாமில் இடம்பெறவில்லை.

குழாம்: லிட்டன் தாஸ் (அணித்தலைவர்), தமிம் இக்பால், சௌமியா சர்க்கார், அனமுல் ஹக், தௌஹிட் ஹிரிடோய், மகமதுல்லா, நுருல் ஹஸன், மஹெடி ஹஸன், நசும் அஹ்மட், முஸ்தபிசூர் ரஹ்மான், தன்ஸிம் ஹஸன் சகிப், தன்ஸிட் ஹஸன் தமிம், ஸகிர் ஹஸன், றிஷாட் ஹொஸைன், சைட் காலிட் அஹ்மட்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பிறைட்டனிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹனிபல் மெஜ்ப்ரி பெற்றார். பிறைட்டன் சார்பாக, டனி வெல்பக், பஸ்கால் குறொப், ஜோவா பெட்ரோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பளு தூக்கலில்

## பதக்கங்களைப் குவித்த யாழ். பல்கலைக்கழக பெண்கள் அணி

■ பு. கஜிந்தன்

இவ்வாண்டே முதன்முதலாக பெண்கள் பளுதூக்கல் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து யாழ் பல்கலைக்கழகம் 7 பதக்கங்களை வென்றுள்ளது. இதில், என். மிதுசா 49 கிலோ கிராம் எடைப் பிரிவில் 90 கிலோ கிராம் எடையைத் தூக்கி தங்க பதக்கத்தையும் கே . சனுஜா 49 கிலோ கிராம் எடைப் பிரிவில் 71 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் எச்.ஏ.ஐ.என் ரத்னநாயக்க 55 கிலோ கிராம் எடைப் பிரிவில் 100 கிலோ கிராம் எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தைப் பெற்றனர்.

ஜெ. பஜினா 64 கிலோ கிராம் எடைப் பிரிவில் 120 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெள்ளி பதக்கத்தையும் ஆர். தசாந்தினி 76 கிலோ கிராம் எடைப் பிரிவில் 110 கிலோ கிராம் எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் ஆர். தக்சாயினி 81 கிலோ கிராம் எடைப் பிரிவில் 100 கிலோ கிராம் எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் பெற்றனர்.

டி.எம்.டி.எம். தனபால 87 கிலோ கிராம் எடைப் பிரிவில் 79 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் எஸ். ஜீவமலர் 87 கிலோ கிராம் எடைப் பிரிவில் 80 கிலோ கிராம் எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் பெற்றனர்.

ஆசிய மாஸ்டர் தடகளப் போட்டி:

# தங்கப் பதக்கம் வென்ற ஹீமாயூன்

### வெள்ளிப் பதக்கம் வென்ற துபைல்

■ எம்.யூ.எம். சனூன்

மலேசியாவில் நடைபெற்று வருகின்ற ஆசிய மாஸ்டர் தடகளப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ள புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் உடற்கல்வி போதனாசிரியர் எம்.எப்.எம். ஹுமாயூன், உயரம் பாய்தலில் தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இதே வேளை சாஹிராவின் உடற்கல்வி போதனாசிரியர் எம்.எப்.எம். துபைல் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.




இத்தாலிய சீரி ஏ தொடர்:

# ஏ.சி மிலனை வீழ்த்திய இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற ஏ.சி மிலனுடனான போட்டியில் 5-1 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் வென்றது.

இன்டர் மிலன் சார்பாக, ஹென்றிக் மிகித்திரயான் இரண்டு கோல்களையும், மார்க்கஸ் துராம், ஹகன் கல்ஹனொக்லு, டேவிடே பிரெட்டசி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். ஏ.சி மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை றஃபேல் லியோ பெற்றார்.



இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற லேஸியோவுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் வென்றது. ஜுவென்டஸ் சார்பாக, டுஸன் விளாகோவிச் இரண்டு கோல்களையும், பெடெரிக்கோ சியெஸ்கா ஒரு கோலையும் பெற்றனர். லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை லூயிஸ் அல்பேர்ட்டோ பெற்றிருந்தார்.

இந்நிலையில், ஜெனோவாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் நாப்போலி சமப்படுத்தியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 18 செப்டெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.